**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 13-ம் நாள்
2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை
*******

**இடைமனு எண்.6/2025 -ல் அசல் வழக்கு எண். 7/2017**

பாஸ்கர் ..... மனுதாரர்/ 3-ம் பிரதிவாதி

...எதிராக...

1. A.ரெங்ககிரி
2. பரிமளா .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 13.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு B.ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாமல் Close செய்யப்பட்டதை ரத்து செய்து மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையாக ஏற்று உத்தரவிடக்கோரி மனுதாரர்/3-ம் பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/3-ம் பிரதிவாதி மீது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் மனுதாரர்/3-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க கோரி வழக்கிடை மனு எண்:2/2022 சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது கடந்த 21-03-2023-ல் அனுமதிக்கப்பட்டு அசல் பிராதில் மனுதாரர்/3-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து உத்தரவாகியுள்ளது.

(ii) இந்த நிலையில் மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பிலும் மற்ற பிரதிவாதிகள் தரப்பிலும் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 19-02-2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர்/3-ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது வழக்கறிஞரை சந்தித்து அவரது தரப்பு வழக்குரையை தாக்கல் செய்ய முடியவில்லை. எதிர்வழக்குரையை தாக்கல் செய்யாததினால் மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை இல்லை என்று Close செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என Close செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து, மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவாக வேண்டியுள்ளது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையெனில் மனுதாரர்/3-ம் பிரதிவாதிக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும். எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவானது விதிமுறைகளின் படி இருந்தால் அனுமதிக்கலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/ 3-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

5. <u>தீர்வு:</u>

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாமல் Close செய்யப்பட்டதை ரத்து செய்து மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையாக ஏற்று உத்தரவிடக்கோரி மனுதாரர்/3–ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மேலும் அசல் வழக்கில் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையிலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து அதன் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாமல் Close செய்யப்பட்டதை ரத்து செய்து மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையாக ஏற்றுக்கொள்ள கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு காணப்பட்டு அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 27–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | – இல்லை – |

(ஓம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

நேரிய/வரைவு உத்தரவு
இடைமனு எண்.6/2025–ல்
அசல் வழக்கு எண்.7/ 2017
நாள்.27.06.2025.